# Flowers in the Spring in the Book Aingurunuru

**Dr. S. Revathi Pappathi**
*Assistant Professor, Department of Tamil*
*S.T. Hindu College, Nagercoil*

**Abstract**
*Some flowers are listed in the book Aingurunuru as flowers blooming in the spring. They are Erikodi, Kaya, Kuravam, Thalavam Nunavam, Maraam, Mullai, Neembu, and Athiral. Literary studies indicate the importance of the flowers in the five chapters of the book Aingurunuru, namely Kurinji, Mullai, Marutham, Neithal Palai, their context, and their symbolic meanings in love and domestic life. The purpose of this article is to reveal that the flowers in the book Aingurunuru are used as metaphors to express feelings such as love, separation, and longing between Thalaivan and Thalaivi.*
***Keywords:*** *Flowers, Spring, Hero, Heroine, Aingurunuru*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17255912

**References**
1. Dr. Dakshinamoorthy A, Aingurunuru, First Edition -2004, New Century Book House Limited, Ambattur, Chennai.
2. Shanmuga Pillai. Mu, "Kurunthogai Moolamum Uraiyum", Edition – 1994, Tamil University, Thanjavur.
3. Dr. Jayakrishnan. P, -2017, "Sanga Ilakkiyathil kuringi malar- oru paarvai", Department of Tamil, University of Kerala, Thiruvananthapuram -ISSN-2554-3993.
4. Dr. Kavita S. Assistant Professor, Department of Tamil, Krishnammal Women's College, Coimbatore -DOI:10.528/zenodo4591422

# ஐங்குறுநூறில் இளவேனில் மலர்கள்

***முனைவர் ச. ரேவதி பாப்பாத்தி***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
தெ. தி இந்துக் கல்லூரி, நாகர்கோவில்

***ஆய்வுச் சுருக்கம்***
*இளவேனிலில் மலரும் பூக்கள் என்றுஐங்குறுநூறு என்னும் நூலில் சில பூக்கள் தொகுத்துக்காட்டப் பட்டுள்ளன. எரிக்கொடி, காயா, குரவம், தளவம் நுணவம், மராம், முல்லை, வேம்பு, அதிரல் என்பனவாகும். ஐங்குறுநூறு நூலில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணைகளில் உள்ள மலர்கள் அவற்றின் சூழலில் முக்கியத்துவம் மற்றும் காதல் இல்லற வாழ்வில் அவற்றின் குறியீட்டு அர்த்தங்கள் ஆகியவற்றை இலக்கிய ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. ஐங்குறுநூறில் இடம்பெறும் இளவேனில் மலர்கள் தலைவன்–தலைவிகாதல், பிரிவு, ஏக்கம் போன்ற உணர்வுகளை வெளிப்படுத்த உவமைகளாகப் பயன்படுத்தப்படுவதை வெளிப்படுத்துவதேஇக்கட்டுரையின் நோக்கமாகும்.*
***திறவுச்சொற்கள்:*** *மலர்கள், இளவேனில், தலைவன், தலைவி, ஐங்குறுநூறு*

## ஆய்வு முன்னுரை

சங்க இலக்கியம் பழந்தமிழர் வாழ்வையும் அவர்கள் இயற்கையோடுஒன்றி வாழ்ந்த வாழ்க்கை முறையினையும் எடுத்துரைக்கும் கால கண்ணாடியாகவும் அழியாச் சான்றாகவும் விளங்கி வருகிறது. பழந்தமிழர் வாழ்வில் இடம் பெற்றகாதல், வீரம், புகழ் ஆகிய மூன்றும் ஆராயப்பட்ட அளவிற்கு இயற்கை ஆராயப்பட வேண்டும். ஐங்குறுநூறில் இளவேனில் காலத்தில் மலரும் மலர்களைப் பற்றிய செய்திகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இளவேனில் என்ற சொல் சங்க இலக்கியங்களில் வெறும் காலமாக மட்டுமில்லாமல் ஒரு பண்பாட்டு உணர்வு மற்றும் வாழ்வியல் அம்சமாகப் பார்க்கப் பட்டது.

## இளவேனில் முக்கியத்துவம்

இளவேனில் காலத்தில் பூக்கும் புதிய மலர்கள் நற்றிணை, அகநானூறு போன்ற நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இளவேனில் காலத்தின் சிறப்பு அம்சமே புதிய மலர்கள் பூப்பதே ஆகும்.

**இளவேனில் புதுமலர்** -*(நற்.100)*
**“இளவேனில் வந்ததெனஇனிது புணர்ந்தனர்**
-*(அக.நா 45)*
**“இளவேனில்மரங்கள் மலர்ந்தன”**
-*(க.தொ 67)*

இளவேனில் என்ற சொல் சங்க இலக்கியங்களில் வெறும் காலமாக மட்டுமல்லாமல் ஒரு பண்பாட்டு உணர்வு மற்றும் வாழ்வில் அம்சமாக கருதப்பட்டது என்பதை சங்க இலக்கியங்கள் மூலம் நாம் அறியலாம். இளவேனில் காலம் என்பது வசந்த காலம் போன்ற ஒரு காலமாகும். இதில் மரங்கள் துளிர்விட்டு பூக்கள் அரும்பி செடிகள் செழித்து வளரும். தமிழ் இலக்கியங்களில் கொன்றை மலர்கள் மற்றும் மாம்பூக்கள் ஆகியவை இளவேனிற் காலத்தின்வகையைக் குறிக்கும் குறியீடுகளாகக் குறிப்பிடப் படுகின்றன.

## சங்க இலக்கியங்களில் மலர்ப் பின்னணி

சங்க கால மக்கள் இயற்கையை உற்று நோக்குவதில் வல்லவர்கள். மனிதர்களுக்கு அடிப்படைத் தேவைகளில் உணவு தேவையை நிறைவேற்றுவதில் இன்றியமையாத

இடம் வகித்தவை மரங்கள். மரங்களின் பெருக்கத்திற்கு மலர்கள் துணை செய்வதால், நிலத்திற்கு மனிதன் மலர்களின் பெயரையே இடத் தொடங்கினான். சங்க காலத்தில் ஆடவர், பெண்டிர் ஆக இருபாலரும் மலர்களையும் தளிர்களையும் மாலையாக் கட்டி அணிந்துள்ளனர். தலைவன் தலைவிக்குக் கையுறையாக மலர்கள் வழங்குவதுண்டு.

### தெய்வ மலர்கள்

மலர்கள் மங்கையர் கூந்தலை அலங்கரிப்பன. அது போன்று தெய்வங்களின் திருவடிகளையும், முடிகளையும் அலங்கரிப்பன. மக்கள் தமக்கு விருப்பமான மலர்களை தெய்வங்களுக்குச் சூட்டி மகிழ்ந்தனர். அதன்படி சிவ பெருமானுக்குக் கொன்றை, திருமாலுக்குத் துளசி, மகிழம், முருகனுக்குக் கடம்பு, விநாயகனுக்கு அருகு, அருகனுக்கு அசோகு, புத்தனுக்குத் தாமரை, உமாதேவிக் குக்குவளை, திருமகளுக்குச் செந்தாமரை, கலைமகளுக்கு வெண்தாமரை, சந்திரனுக்கு ஆம்பல், இந்திரனுக்கு மந்தாரம், காளிக்குச் செவ்வளரி, கதிரவனுக்குத் தாமரை என்பதை விருப்பமலர்கள் எனக் கூறப்படுகின்றன. சிவபெருமானுக்குச் சி ன்னமான கொன்றை மலர் கண்ணியாகவும் தாராகவும் அமைந்துள்ளதை “கண்ணிகார் நறுங்கொன்றை காமர் வண்ணமாறில் தாரும் கொன்றை என்று புறப்பாடல் கூறுகின்றது.

### ஐங்குறுநூறில் இளவேனில் மலர்கள்

ஐங்குறுநூறு நூலில் இளவேனில் காலத்தைக் குறிக்கும் மலர்களாக நுணாம்பூ மற்றும் காயாம்பூ ஆகியவை குறிப்பிடப்படுகின்றன. இளவேனில் காலத்தில் களிப்புடன் பாடும் வண்டுகள், நுணாம்பூவினை சுற்றி காணப்படும். மேலும் தலைவன் பிரிந்து சென்ற துயரத்தில் இருக்கும் தலைவிக்கு காயாம்பூவின் வாசம் அவனது நினைவை ஏற்படுத்தும். இளவேனில் மலரும் பூக்கள் என்று ஐங்குறுநூறு என்னும் நூலில் சில பூக்கள் தொகுத்துகாட்டப்பட்டுள்ளன. அவை அதிரல், எரிக்கொடி, காயா, குறவன், கொன்றை, கொங்கம், தளவம், நுணவம், நெய்தல், பலா, பாதிரி, பிளவு மரம், மா, முல்லை, வேம்பு என்பனவாகும்.

### அதிரல்

**“அவரோ வாரார்: தான்வந்தன்றே**
**புதுப்பூ அதிரல்தா அய்க்**
**கதுப்பு அறல் அணியும் காமர் பொழுதே!”**
**- (ஐங். 345)**

அதிரல் என்ற மலர் இளவேனிற் பருவத்தில் மலர்வது. கருமணல் மகளிரின் கூந்தலுக்கு உவமையாய் அமைவது. இளவேனிற் பருவம் வருமுன் வந்து விடுவதாக உறுதி கூறிச் சென்றகாதலர் இன்னும் வரவில்லை. ஆனால் புதிய பூக்களைக் கொண்ட அதிரல் என்னும் கொடி பரவி மகளிர் கூந்தல் போல கருமையானகுன்றுகளைஅழகுபடுத்தும்; அழகிய இளவேனில் பருவம் வந்துவிட்டது என்னும் பொருள்கொண்ட பாடலில், இளவேனில் மலராகிய அதிரல் பற்றிப் பாடப்பட்டுள்ளது.

### கொன்றை

காயா கொன்றை, நெய்தல், முல்லை, போதவிதழ், தளவமொடு பிடவு அலர்ந்து கவினிப்

**பூ அணிகொண்டன்றால் புறவே**
**பேர் அமர்க்கண்ணி-ஆடுகம் விரைந்தே**
**- (ஐங். 412)**

அழகானகண்களுடைய பெண்ணே! முல்லை நிலத்தில்காயா, கொன்றை, நெய்தல், முல்லை, தளவம், பிடவம் ஆகிய மலர்கள் பூத்துக் குலுங்கும்; காட்சிகளைக்கண்டு மகிழ்ந்து, பொழிலில் ஆடுவோம் வா என்று தலைவன், தலைவியை அழைப்பதே இந்தப் பாடலின் பொருளாகும்.

**வேம்பு**

**"வேம்பின் ஒண் பூ உறைப்ப"**

***(ஐங். 350)***

**"இளவேனில் வேம்பு மலர்தல்**
**கருங்கால் வேம்பின் ஒண் பூ யாணர்**
**என்னை இன்றியும் கழிவதுகொல்லோர்"**

***(குறு. 24)***

என்று வேம்பு மலர்கள் பற்றிப் பாடப் பட்டுள்ளன.

**மா மலர்**

மா மலர் என்பது மாமரத்தின் மலரைக் குறிக்கிறது. மாமரத்தில் பூக்கும் மலர்கள் பொதுவாக பழங்களை உண்டாக்க உதவுகின்றன. மாமரத்தில் பூக்கும் மலர்கள் சிறியவையாகவும் பச்சையாகவும் இருக்கும் இலக்கியங்கள் கொத்துக்கொத்தாக மாம் பூக்கள் மாந்தளிர் விடுவதை இளவேனில் கால வருகையின் குறியீடாகவே பாடுகின்றன.

**"பொரிகால் மாஞ்சினை புதைய**
**எரிகால்இளந்தளிர் ஈனும் பொழுதே"**

***(ஐங். 349)***

இளவேனில் காலம் வந்துவிட்டது. நெருப்பைப் போன்ற இளம் தளிர்களை மாமரம் ஈனும் காலம் இதுஎன்று கூறி, தன் பிரிவுத்துயரை எண்ணி, தலைவி பாடுவதாக இப்பாடல்அமைந்துள்ளது.

**ஆய்வு முடிவுரை**

சங்க காலத்தில் இருந்தே தமிழர்களின் வாழ்வியலோடு ஒன்றியது மலர்களாகும். மனிதர்களின் பிறப்பு முதல் இறப்பு வரை பல நிலைகளில் தமிழர்களின் முக்கிய அங்கமாக மலர்கள் இருக்கின்றன. ஐங்குறுநூறில் அகத்திணைப் பாடல்களில் இளவேனிற் பத்தில் இந்த மலர்களைப் பயன்படுத்தி நிலங்கள், காலம் மற்றும் மனிதர்களின் உணர்வுகளைச் சிறப்பாக விவரித்துள்ளது. இயற்கையின் சுழற்சியோடு இணைந்து மக்களின் வாழ்க்கை முறையும், உணர்வுகளும் இளவேனில் காலத்தோடு பின்னிப்பிணைந்து இருந்தது என்பதை சங்க இலக்கியங்கள் மூலம் நாம் அறியலாம்.